பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 27 ஞாயிற்றுக்கிழமை 11.07.2021 கதிர் 114

## கொரோனாச் சட்டத்தை மீறிய 49,259 பேர் கைது

கொரோனாத் தடுப்புத் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 214 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரை 2

# கொரோனாச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்காதீர்!



### அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென அரசிடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி இடித்துரைப்பு

**இலங்கையில் அமைதி ஆர்ப்பாட்டங்களை நடத்தும் பொதுமக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உரிமை கொரோனாக் கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக் கூடாது.**

**-இவ்வாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர்.** 2

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கஜேன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு

### கொலையா? தற்கொலையா? பொலிஸார் தீவிர விசாரணை



**(இ.கலையமுதன்)**

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம், இராமாவில் பகுதியில் அவரது வீட்டுக்கு அருகிலுள்ள காணியில், மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2

## கொரோனாவின் தீவிரத்தால் மேலும் ஒரு பிரதேசம் முடக்கம்

கொரோனா பரவல் தீவிரத்தால் இரத்தினபுரி மாவட்டத்தின் பரகல கிராம சேவகர் பிரிவு இன்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தின் தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலஹேன தெற்கு கிராம சேவகர் பிரிவு, தலஹேன வடக்கு கிராம சேவகர் பிரிவு ஆகியவற்றின் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், குருநாகல் மாவட்டத்தின் கஹன்கம கொஸ்கல வத்த பகுதியும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

### நீரில் மூழ்கிக் காணாமல் போன

## தாத்தாவும், 2 பேரன்களும் சடலங்களாக இன்று மீட்பு

கொஸ்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துவமோதர கங்கையில் மூழ்கிக் காணாமல்போன மூவரின் சடலங்களும் இன்று மீட்கப்பட்டுள்ளன.

நாபே கொஸ்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய வயோதிபரினதும், 06 வயதுடைய இரட்டைச் சிறுவர்களினதும் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கொஸ்கொட பிரதேசத்தைச் சேர்ந்த தாத்தா, தனது இரண்டு பேரன்களுடனும் தோணி செலுத்தும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தனர்.

இவர்களை மீட்கும் பணியில் காலி கடற்படைப் பிரிவின் அதிகாரிகள் ஈடுபட்டிருந்த நிலையிலேயே 2

### இலங்கைக்குக் கடத்த இருந்த

## 1,350 கிலோ மஞ்சள் மூட்டைகள் தமிழகப் பொலிஸாரிடம் சிக்கின



**(ந.லோகதயாளன்)**

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்குக் கடத்த இருந்த சுமார் 1,350 கிலோகிராம் மஞ்சள் மூட்டைகள் இந்தியாவின் மண்டபம் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டது.

சமீபகாலமாக மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டை, கடல் பல்லி, கஞ்சா, சமையல் மஞ்சள் உள்ளிட்ட பொருள்கள் அதிகமாகக் கடத்தப்பட்டு 2

### வல்வெட்டித்துறையில் தனிமையில் வாழ்ந்த

## 35 வயது பெண்ணை வன்புணர்ந்த 30 வயது நபர் பொலிஸாரால் கைது

(இ.கலையமுதன்)

தனிமையில் வாழ்ந்த பெண் ஒருவரைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியமை, சட்டத்துக்குப் புறம்பான வன்புணர்வு மற்றும் படுகாயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் 30 வயதுடைய நபர் ஒருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி வீடு புகுந்த 30 வயதுடைய நபர், வீட்டில் தனிமையில் வாழ்ந்த 35 வயதுடைய பெண்ணை வன்புணர்ந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். 2

### 15 வயது சிறுமி விற்பனை விவகாரம்;

## மேலும் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் வசமாக சிக்கினர்

### எம்.பி. ஒருவருக்கும் வலைவீச்சு



15 வயது சிறுமி ஒருவரைப் பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தின் ஊடாக விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் அரச வங்கியொன்றின் முன்னாள் முகாமையாளர் ஒருவரும், பொலிஸ் விளையாட்டுப் பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சிறுமியின் தொலைபேசியின் ஊடாக 2

## 1,350 கிலோ மஞ்சள்....................

(முதலாம் பக்க தொடர்ச்சி)
வருகின்றது. இதனைத் தடுக்க கடற்கரை கிராமங்களில் மெரைன் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், தனுஷ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்குச் சட்ட விரோதமாக சமையல் மஞ்சள் கடத்த இருப்பதாக மண்டபம் மெரைன் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இன்று காலை மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரை பகுதியில் தமிழகப் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது வேதாளை மீன்பிடித் துறைமுகம் கடலில் பதிவு எண் இல்லாத சந்தேகத்துக்கிடமான முறையில் நாட்டு படகு ஒன்று நின்றுள்ளது. அந்தப் படகை நோக்கி மெரைன் பொலிஸார் கடலில் செல்லும் ஸ்கூட்டரில் சென்றபோது பொலிஸ் வருவதைக் கண்டு படகில் இருந்த நபர்கள் கடலில் குதித்துத் தப்பியோடியுள்ளனர்.

பின்னர் மெரைன் பொலிஸார் நாட்டுப் படகில் ஏறி சோதனை செய்த போது படகுக்குள் இலங்கைக்குக் கடத்துவதற்காக மூடை மூடையாக அடிக்கி வைக்கப்பட்டிருந்த சமையல் மஞ்சள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து நாட்டுப் படகுடன், சமையல் மஞ்சள் மூடைகளைக் கைப்பற்றிய மெரைன் பொலிஸார் மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று வழக்குப் பதிவு செய்து தப்பியோடியவர்களைத் தேடி வருகின்றனர்.

## சாவகச்சேரி........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
உறுப்பினரான சிவகுமார் கஜேன் (வயது 28) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தூக்கில் தொங்கிய நிலையில் அவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளதால் மரணம் கொலையா? தற்கொலையா? என்ற கோணத்தில் கொடிகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த சிவகுமார் கஜேன், யாழ். மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் பட்டியலில் ஒருவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாத்தாவும், 2 ......

(முதலாம் பக்க தொடர்ச்சி)
அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களது சடலங்கள் பலப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தனிமைப்படுத்தல்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)
49 ஆயிரத்து 259 பேர் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 35 வயது பெண்ணை....

(முதலாம் பக்க தொடர்ச்சி)
அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாலியல் ரீதியாக துன்புறுத்தியமை, சட்டத்துக்குப் புறம்பான வன்புணர்வு, படுகாயம் ஏற்படுத்தியமை மற்றும் அத்துமீறி வீடு புகுந்தமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சந்தேகநபர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மேலும் ஒரு..........

(முதலாம் பக்க தொடர்ச்சி)
மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதன்படி, 28 மற்றும் 29 ஆகிய வயதுடைய குறித்த இரண்டு சந்தேகநபர்களையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, குறித்த சம்பவத்தின் 12 ஆவது சந்தேகநபராக பொலிஸ் விசேட படைப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினால் கைதுசெய்யப்பட்டதுடன், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, குறித்த சிறுமியைப் பாலியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் நாடளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொரோனாச் சட்டத்தை...

(முதலாம் பக்க தொடர்ச்சி)
அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அப்பால் செல்லக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கொரோனாவைக் காரணம் காட்டி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் மறுஅறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளன.

குறித்த தடைகளைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில், கருத்து வெளியிடும் சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகள் கொரோனாக் கட்டுப்பாட்டு சட்டங்களால் மீறப்படக் கூடாது என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

# 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு, கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் களு, களனி, கின், நில்வள கங்கைகளை அண்மித்த மற்றும் இருமருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கங்கைகளை அண்மித்த வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்த வேண்டும் என நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கடும் மழையுடனான காலநிலை காரணமாக ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்குக்கு மத்தியில் நிவாரணம் வழங்குவதற்காகக் களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு கடற்படையின் நிவாரணக் குழு அனுப்பப்பட்டுள்ளதாக கடற்படை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக 37 நிவாரணக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளன எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

ZOOM மூலம் IELTS வகுப்பு

ஓய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-
076- 5500036

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தாமதமான சட்டச் சவால்

'தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்" என்பார்கள்.

சட்டம் ஏதும் இல்லாமல், கொரோனாத் தொற்று நெருக்கடி என்ற இக்கட்டை முன்னிறுத்தி, அரசு அராஜகம் புரிகின்றது, எதேச்சாதிகாரமாக நடக்கின்றது என்றெல்லாம் பல தடவைகள் இப் பத்தியில் திரும்பத் திரும்ப சுட்டிக் காட்டினோம்.

தமிழர்கள் மறைந்த தம் உறவுகளுக்கு அஞ்சலிப்பதற்காக சமூக இடைவெளியைப் பின்பற்றி ஒன்று கூடினால் கூட அதற்கு எதிராக அந்த ஒன்று கூடலைத் தடுப்பதற்காக மட்டும் கொரோனாத் தடுப்பு என்ற பெயரிலான நடவடிக்கையில் பொலிஸாரையும் சுகாதார அதிகாரிகளையும் இந்த ஆட்சிப் பீடம் ஏவி விடுகின்றது, இது சர்வாதிகாரம் என்று திரும்பத் திரும்ப கூறிய போது அது தென்னிலங்கையின் காதுகளில் விழவில்லை.

கொரோனாப் பேரிடர் ஏற்பட்டு ஒன்றரை வருடங்களாகி விட்டன. கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறினர் என்ற பெயரில் ஐம்பதினாயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தளவு எண்ணிக்கையான வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளன. கைதான பலருக்கு கீழ் நிலை நீதிமன்றங்கள் அபராதம், எச்சரிக்கையுடனான விடுவிப்பு என்று தண்டனைத் தீர்ப்புகளைக் கூட வழங்கியிருக்கின்றன.

ஆனால், அப்படிச் செய்வதற்கு சட்டம் ஏதுமில்லை என்பது தான் விசனத்திற்குரிய உண்மை.

சட்டமின்றியே – அதிகாரமில்லாமலேயே – ஆட்சியாளர்கள் எதேச்சாதிகாரம் செய்வதற்கு நீதித்துறையே அனுமதித்து, அங்கீகாரம் வழங்கிய நிலைமையே தொடர்ந்தது.

கேட்டால், யாரும் சரியான நீதிமன்றங்களில் இந்த விடயங்களை கேள்விக்கு உட்படுத்தவில்லை என்று நீதித்துறையினரிடமிருந்து பதில் நிச்சயம் வரும்.

ஆனால், உண்மையான ஜனநாயகமும், நீதித்துறையும் உள்ள இந்தியா போன்ற நாடுகளில் இந்நிலைமை நீடித்திருக்குமானால், நீதிமன்றம் தானாகவே இத்தகைய நடவடிக்கைகளை விசாரணைக்கு எடுத்திருக்கும் – பொதுநல விவகாரம் என்ற முறையில்.

கொவிட் தொற்றுச் சமயத்தில் தனது பிரதேச மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கச் சென்ற அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கா கைது செய்யப்பட்டமை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கில் கூட ரஞ்சனின் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதோடு நீதிமன்றங்கள் நின்று கொண்டனவே தவிர, கொவிட் விவகாரத்தில் சட்டமின்றி, எதேச்சாதிகாரம் அரங்கேறுகின்ற உண்மை சுட்டிக் காட்டப்பட்டும் நீதிமன்றம் – இலங்கை நீதித்துறை – அதற்குள் இறங்கி, அதைக் கையாண்டு, நேர்சீர் செய்யாமல் தவிர்த்துக் கொண்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியோ, ஜே.வி.பியோ கூட உரிய சட்டம் இல்லாமலேயே அவ்விடயத்தில் எதேச்சாதிகாரமாக அரசு – ஆட்சிப் பீடம் – செயற்படுகின்றது என்பதை மக்களிடமோ, நீதிமன்றத்திடமோ இதுவரை சரியாக எடுத்துச் செல்லவில்லை.

ஆக, கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மட்டுமே நாடாளுமன்றத்திலும், பொது வெளியிலும், நீதிமன்றங்களிலும் அவ்வப்போது இதைச் சுட்டிக் காட்டி வந்திருக்கின்றார்.

கொவிட் தொற்றுத் தொடங்கி, அரசு நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்தபோது உரிய சட்டங்கள் ஏதுமின்றியே இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள் என்று சுமந்திரன் முன்வைத்த கருத்தை நாட்டின் மனித ஆணைக்குழுவே ஏற்று, அங்கீகரித்து, அதனை எழுத்தில் அரசுக்கும் சுட்டிக் காட்டியிருந்தது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்ட நிலையில், கொவிட் பரம்பல் காரணமாக தேர்தல்கள் ஆறு மாதங்கள் வரைத் தள்ளிப்போயின. அப்போது, கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீளக் கூட்டுமாறு இப்போதைய எதிரணியால் வலியுறுத்தப்பட்டு நீதிமன்றில் மனுச் செய்யப்பட்டது. அந்த விண்ணப்பத்தில் கொவிட் விவகாரத்தைக் கையாள்வதற்கான சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்காகவும் நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால், தேர்தல் முடிந்ததும், அதை அடியோடு மறந்து விட்டது எதிரணி.

இப்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளரும், ஆதரவாளர்களும் கொத்தலாவலை கல்வி நிறுவனச் சட்ட மூலம் தொடர்பில் ஆர்ப்பாட்டம் செய்து, கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரும், பொலிஸாரால் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு, கேப்பாபிலவில் தனிமைப்படுத்தலில் அடைக்கப்பட்ட பின்னர்தான் இதற்கு சட்ட அதிகாரம் இல்லை, எதேச்சாதிகாரம் என்று சிங்களக் கட்சிகளும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கங்கள் போன்ற அமைப்புகளும் கொதித்தெழுந்திருக்கின்றன. அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றன.

காலம் தாழ்த்தியாவது நீதி கேட்டுப் புறப்பட்டமை வரவேற்கத்தக்கதுதான். தங்கள் தரப்பு மீது எதேச்சாதிகாரம் எல்லை மீறிப் பாயும் போதுதான் இந்தச் சூடு, சுறணை எல்லாம் தெற்குக்கு வந்திருக்கின்றன.

# தவிசாளர் நிரோஷ் மீது அச்சுறுத்தல் வலி. வடக்கு தவிசாளர் கண்டனம்



அரசின் ஆள்கள் எனக் கூறிவலிகாமம்கிழக்குப்பிரதேச சபையின் தவிசாளர் நிரோஷ் மீது அச்சுறுத்தல் விடுத்து, தாக்க முற்பட்டமை அராஜகத்தின் உச்சம் என வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு –

பிரதேசசபை தவிசாளர் எனப்படுபவர் அந்தப் பிரதேச மக்களால் தெரிவுசெய்யப் பட்ட பிரதேசத்தின் முதல் பிரஜை ஆவார். மக்களுக்குத் தேவையான சரியான விடயங்கள் எவை என இனங்கண்டு அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் பாரிய பங்களிப்பு ஆற்றிவருபவர் தவிசாளர் நிரோஷ்.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் உள்ளூர் மக்கள் பிரதிநிதிகள் அபிவிருத்தித் திட்டங்களை எவ்வித அச்சுறுத்தலும் இன்றி ஆற்றி வந்தனர். ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போதைய புதிய அரசு உள்ளூராட்சித் தலைவர்களை சுதந்திரமாக இயங்கவிடாது, அவர்களின் அதிகார வரம்புகளை மீறி – அவர்களின் எல்லைப் பரப்புக்குள் அத்துமீறி – யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற அரச சார்பு எம்.பி. ஒருவரும் அரசின் ஆதரவாளர்களும் பல அடாவடித்தனங்களை மேற்கொண்டு வருகின்றமை கண்டிக்கத்தக்கதே.

அதன் தொடர்ச்சியாகவே கடந்த வெள்ளிக்கிழமை மத்திய மாகாண இலக்கத் தகடு பொருத்திய வாகனத்தில் வந்த சில காடையர்கள் தவிசாளர் நிரோஷின் வாகனத்தை மறித்துத் தாம் அரசின் ஆள்கள் எனக் கூறி அவரை அச்சுறுத்திச் சென்றுள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு செயற்பாடாகும். இவ்வாறான அராஜகங்கள் உடன் நிறுத்தப்பட்டு, பொலிஸார் நீதியான விசாரணைகளை மேற்கொண்டு காடையர்களை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும். காடையர்கள் வந்த வாகன இலக்கத்தையும் தவிசாளர் பொலிஸ் முறைப்பாட்டில் வழங்கியுள்ளார். உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆளும்வர்க்கத்துக்கு எதிராக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கண்டனத் தீர்மானங்களையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தவேண்டி வரும். – என்றுள்ளது.

# 38 லட்சத்து 96 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நாட்டில் இதுவரை கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டது

நாட்டில் இதுவரை 38 லட்சத்து 96 ஆயிரத்து 184 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக நேற்றைய தினத்தில் மாத்திரம் ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 510 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று 34 ஆயிரத்து 555 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை 3 லட்சத்து 85 ஆயிரத்து 647 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

# கோடிக்கணக்கான பண மோசடி கடுவெலவில் சிக்கினார் பெண்

ஜப்பானில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தருகிறேன் எனக் கூறி பலரிடம் கோடிக் கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடுவெல கொரதொட்ட பகுதியில் வைத்து நவகமுவ பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.


நவகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த இருவரிடம் எட்டு லட்சம் ரூபா பணம் மோசடி செய்ததாக செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்து இந்தப் பெண்ணிடம் விசாரணை நடாத்திய போது ஜப்பானில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருகிறேன் எனக் கூறி நாட்டின் பல பாகங்களிலும் பலரிடம் கோடிக் கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

மோசடிகள் தொடர்பில் நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களில் 32 வழக்குகள் தொடரப்பட்டுள்ளமையுடன், இந்த வழக்குகளில் முன்னிலையாகாமை தொடர்பில் 17 பிடிவிறாந்து உத்தரவுகளும் இந்தப் பெண்ணுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தெஹியோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான பெண் ஒருவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சுமந்திரன் எம்.பி. ஏற்பாட்டில் உபகரணம்



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் 28 லட்சம் ரூபா பெறுமதியிலான மருத்துவ உபகரணங்கள் நேற்று சனிக்கிழமை வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திலீபனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட இரட்சணிய சேனை படைப்பிரிவின் ஒழுங்கமைப்பாளர் ரஞ்சித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இணைந்து இந்த மருத்துவ உபகரணங்களை வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கிவைத்தனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 13 லட்சம் ரூபா பெறுமதியான சுவாசம் சீர்ப்படுத்தும் கருவியும் 15 லட்சம் ரூபா பெறுமதியிலான ஏனைய மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான கே.சயந்தன், ச.சுகிர்தன், வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரன், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலை சமூகத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# தடுப்பூசி போடாவிட்டால் வேலை இல்லை; பிஜி அரசு

ஒரு சில நாடுகள் கொரோனாத்தடுப்பூசிசெலுத்திக்கொள்ள மக்களை ஊக்குவிக்கும் விதமாக சலுகைகள் மற்றும் பரிசுகளை அறிவித்துள்ளன. இன்னும் சில நாடுகள் கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் மக்களை தடுப்பூசி போடுவதற்கு வற்புறுத்தி வருகின்றன. அந்த வகையில் தென் பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான பிஜியில் “தடுப்பூசி போடாவிட்டால், வேலை இல்லை” என அந்த நாட்டு அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் தங்கள் வேலையை இழக்க நேரிடும் என்று பிரதமர் பிராங்க் பைனி மராமா அறிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் தடுப்பூசியின் முதல் டோஸை செலுத்திக்கொள்ளாத அரசு ஊழியர்கள் கட்டாய விடுப்பில் அனுப்பப்படுவார்கள் என்றும் நவம்பர் 1ஆம் திகதிக்குள் இரண்டாவது டோஸ் செலுத்தப்படாவிட்டால், பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் பிராங்க் பைனி மராமா தெரிவித்துள்ளார்.

# ரஷ்யா மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் – அமெரிக்கா எச்சரிக்கை



ரஷ்யாவில் இருந்து வரும் சைபர் தாக்குதல்களை தடுக்க முறையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ரஷ்யாவை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்காவில் சமீபகாலமாக சைபர் தாக்குதல் மிக பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகிறது. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்க அரசின் முக்கிய துறைகளின் கம்பியூட்டர்களில் ஹக்கர்கள் ஊடுருவி உளவு பார்த்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் உள்துறை, பாதுகாப்பு, உள்நாட்டு பாதுகாப்பு, நிதி மற்றும் வணிகம் போன்ற 9 அரசு துறைகள் மற்றும் மைக்ரோசொப்ட் உட்பட 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் மீது இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த சைபர் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் ரஷ்யா அதனை திட்டவட்டமாக மறுத்தது.

இந்த நிலையில் அமெரிக்காவின் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனமான ‘கசேயா’ மீது கடந்த 2 வாரங்களுக்கு முன்பு ‘ரான்சம்வேர்’ தாக்குதல் நடத்தப்பட்டது. இது கடந்த டிசெம்பர் மாதம் அரசு துறைகளை குறிவைத்து நடத்தப்பட்ட சைபர் தாக்குதலை விட பல மடங்கு பெரிது என சைபர் பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவித்தனர்.

‘கசேயா’ நிறுவனம் பெரிய மற்றும் சிறிய வர்த்தக நிறுவனங்களின் மென்பொருள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் என்பதால் இந்த நிறுவனம் மீதான சைபர் தாக்குதலால் 1,500இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன.

இதனிடையே ரஷ்யாவைச் சேர்ந்த ஆர் இவில் எனும் ஹக்கர் குழுதான் இந்த ‘ரான்சம்வேர்’ தாக்குதலை நடத்தியதாகவும், அந்த ஹக்கர் குழுவுக்கு ரஷ்ய அரசு பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் ரஷ்யா வழக்கம்போல் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்ய அதிபர் புடினை நேற்று முன்தினம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார். இருவருக்கும் இடையிலான இந்த தொலைபேசி உரையாடல் சுமார் 1 மணி நேரம் நீடித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்தது. இந்த உரையாடலின் போது ரஷ்யாவில் இருந்து வரும் சைபர் தாக்குதல்களை தடுக்க முறையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஜோ பைடன் புடினை எச்சரித்தார்.

புடினுடனான தொலைபேசி உரையாடலுக்கு பின் வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர்களை சந்தித்த ஜோ பைடன் இது குறித்து கூறுகையில், அவரது (புடின்) மண்ணில் இருந்து சைபர் தாக்குதல் வரும்போது, அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை ரஷ்ய அரசிடம் இருந்து அமெரிக்கா எதிர்பார்க்கிறது என்பதை அவருக்கு மிக தெளிவுப்படுத்தினேன். அந்த சைபர் தாக்குதலில் ரஷ்ய அரசுக்கு தொடர்பு இல்லை என்றாலும், தாக்குதல் நடத்தியது யார் என்பதை உறுதி செய்ய போதுமான தகவல்களை நாங்கள் அவர்களுக்கு வழங்கினால், அதனைக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என கூறினார். அதனை தொடர்ந்து நிருபர் ஒருவர், இந்த விவகாரத்தில் ரஷ்யா ஏதேனும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடுமா? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த ஜோ பைடன், ஆம், சைபர் தாக்குதல்களை தடுக்க ரஷ்ய அரசு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அந்த நாடு பொருளாதாரத் தடை உள்ளிட்ட மிகவும் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றார்.



## சீன உலக செயற்கை நுண்ணறிவு மாநாடு

# 300 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்ட நவீன செயலிகள்

சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற உலக செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் 300 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்ட பல்வேறு அதிநவீன செயலிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில், பொதுமக்கள் தங்களுக்குத் தேவைப்படும் செயலிகளை தங்களே வடிவமைத்துக்கொள்ள உதவும் அதிநவீன செயலி மற்றும் சாரதி இன்றி தானியங்கி முறையில் வாகனங்களை இயக்கும் செயலி பார்வையாளர்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தியது.

அடுத்தாண்டு பெய்ஜிங்கில் நடக்கும் குளிர்காலப் போட்டிகளின் போது காயமடையும் வீரர்கள் குறித்து எச்சரிப்பது முதல், 10 கிலோ மீற்றர் சுற்றளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிப்பது வரை பல்வேறு அதிநவீன சென்சார்கள் மற்றும் கமராக்களை கட்டுப்படுத்தும் செயலிகளும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.






## சோமாலியாவில்

# காவல்துறை உயரதிகாரியை குறிவைத்து நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் 8 பேர் மரணம்

சோமாலியாவில் காவல்துறை உயரதிகாரியை குறிவைத்து நடந்த தற்கொலை படைத்தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

சோமாலியாவில் ரியா சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தி அல்-பாப் தீவிரவாதிகள் பல குண்டு வெடிப்பு சம்பவங்களை நிகழ்த்தி வருகின்றனர்.

தலைநகர் மொகதிசுவில் பொலிஸ் உயரதிகாரி பர்ஹான் கரோல் (Farhan Qarole) பயணித்த வாகனத்தின் மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரை தீவிரவாதிகள் மோதினர். இதில் அந்த அதிகாரி தப்பித்த போதும், பொதுமக்கள் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.








## கீழடி அகழாய்வில் வெளிவந்த சுடுமண் உறை கிணறு

### மூன்றடுக்குகளில் நுட்பமான வடிவமைப்பு

தமிழகத்தின் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள கீழடியில் தற்போது 7 ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. கீழடியில் மட்டுமன்றி கொந்தகை, அகரம், மணலூர் உள்ளிட்ட பகுதிகளிலும் குழிகள் தோண்டப்பட்டு அகழாய்வுப் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. மண்ணுக்குள் புதைந்திருந்த பாசிமணிகள், சிறிய, பெரிய பானைகள், பெண்கள் காதில் அணியும் தங்க ஆபரணங்கள் உட்பட ஏராளமான பழங்காலப் பொருள்கள் இங்கே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கீழடியில் அகழாய்வில், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சுடுமண்ணால் ஆன உறை கிணறு தற்போது வெளிப்பட்டுள்ளது. இந்த உறை கிணறு மூன்று அடுக்குகளைக் கொண்டதாக உள்ளது. இரும்புச் சங்கிலி போன்ற நுட்பமான வடிவமைப்பு அதில் காணப்படுகிறது.

பண்டைய காலத்திலேயே கீழடியில் வாழ்ந்த தமிழர்கள் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கி இருக்கிறார்கள் என்பதற்கு இதுபோன்ற உறை கிணறுகள் முக்கிய ஆதாரமாகக் கிடைத்து வருகின்றன. இந்த ஏழாம் கட்ட அகழ்வாராய்ச்சியில் உறை கிணறு கிடைத்துள்ளது இதுவே முதல் முறை.

கடந்த ஆண்டு நடந்த ஆறாம் கட்ட அகழ்வாராய்ச்சிப் பணியின்போது 38 அடுக்குகளைக் கொண்ட பெரிய உறை கிணறு கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மேகதாது அணைப் பிரச்சினை தொடர்பாக

## தமிழகத்தில் நாளை அனைத்துக்கட்சிக் கூட்டம்



கர்நாடக மாநிலத்தில், காவிரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிய அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டால் தமிழகத்திற்கு வரும் காவிரி நீரின் அளவு வெகுவாகக் குறையும். எனவே அணைகட்டும் முயற்சியைத் தடுத்து நிறுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கடந்த சில தினங்களுக்கு முன்பு டெல்லி சென்று இந்திய மத்திய நீர்வளத்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசினார். அப்போது, ‘தமிழக அரசிடம் தெரிவிக்காமல் கர்நாடகாவுக்கு மேகதாது அணைகட்ட அனுமதி வழங்கப்படாது!’ என்று மத்திய அரசு சார்பில் உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனாலும், கர்நாடக அரசு தொடர்ந்து மேகதாது அணைகட்டும் நடவடிக்கையில் முனைப்புக் காட்டி வருகிறது.

இந்த நிலையில், மேகதாது அணை கட்டும் பிரச்சினை தொடர்பாக விவாதிப்பதற்காக நாளைசட்டமன்றஅனைத்துக்கட்சிக்கூட்டத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூட்டியுள்ளார். இந்தக் கூட்டத்தில், தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., பா.ஜ.க., ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, புரட்சி பாரதம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகிய 13 கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்ளவிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தில், மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதைத் தடுக்க தமிழக அரசு எடுக்கவேண்டிய முயற்சிகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது. ஏற்கனவே, பெரும்பாலான கட்சிகள், மேகதாதுவில் அணை கட்டுவதை எதிர்த்து தமிழக சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில், சட்டப் போராட்டம் நடத்தியே மேகதாது அணை கட்டும் முயற்சியை தமிழக அரசு தடுக்க முடியும் என்று தெரிகிறது. எனவே, எந்த வகையில் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்படவிருக்கிறது. சட்டமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஆலோசித்து எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. தமிழக அரசு சார்பில் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்வது குறித்தும் முடிவு எடுக்கப்படவுள்ளது.

## தமிழக பா.ஜ.கவின் தலைவராக அண்ணாமலை

### பன்னீர் செல்வம் வாழ்த்து



தமிழக பா.ஜ.கவின் புதிய தலைவராக இருந்த எல்.முருகன் அண்மையில் மத்திய அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டமையையடுத்து, விருப்பஓய்வுபெற்றஐ.பி.எஸ். அதிகாரியும் பா.ஜ.கவின் துணைத் தலைவராக இருந்தவருமான அண்ணாமலை அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு பலத்தரப்பினரும் வாழ்த்துத் தெரிவித்து வருகிறார்கள். அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், அண்ணாமலையைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

இதனைத் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ள, அண்ணாமலை ‘அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள், தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துகள் தெரிவித்ததற்கு என் மனமார்ந்த நன்றிகள். இன்றுபோல் என்றும் அ.தி.மு.க., பா.ஜ.கவின் தோழமையும் தமிழர் வளமும் வளரட்டும்’ என்று நன்றி தெரிவித்திருக்கிறார்.

## ஜூலை 22 முதல் நாடாளுமன்றத்துக்கருகே விவசாயிகள் போராட்டம் நடத்துவார்கள்

### ராகேஷ் டிக் கைட் அறிவிப்பு



ஜூலை 22ஆம் திகதி முதல் 200 விவசாயிகள் நாடாளுமன்றத்திற்கு அருகே போராட்டத்தை நடத்துவார்கள் என பாரதிய கிசான் யூனியன் தலைவர் ராகேஷ் டிக்கைட் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு பேட்டியளித்த ராகேஷ் டிக்கைட், எந்த நிபந்தனையும் இல்லாமல் விவசாயச் சட்டங்கள் குறித்துப் பேச்சு நடத்த இந்திய அரசு விரும்பினால் நாங்கள் பேச்சுக்குத் தயாராக இருக்கிறோம். இதுதான் பலனளிக்கும் தீர்வைத் தரும், இல்லையென்றால் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்துவார்கள் என்று கூறியுள்ளார்.

மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக கடந்த வருடம் நவம்பர் 26ஆம் திகதி முதல் டெல்லி எல்லைகளை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதன்பின்னர் விவசாயிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே சில கட்டப் பேச்சுகள் நடந்தன. ஆனால், ஜனவரி 26 அன்று நடந்த விவசாயிகளின் நாடாளுமன்ற முற்றுகைக்குப் பின்னர் பேச்சு எதுவும் நடைபெற்றிருக்கவில்லை.

இந்தச் சூழலில்தான், ‘இந்திய அரசு பேச்சு நடத்த வேண்டும்!’ என்று ராகேஷ் டிக்கைட் தெரிவித்திருக்கிறார். தொடர்ந்து பேசிய அவர், எங்கள் கோரிக்கைகளை அவர்கள் கேட்கும்வரை நாங்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு வெளியே போராட்டம் நடத்துவோம் என்று உறுதிபடக் கூறியிருக்கிறார்.



## கொரோனா இன்னும் ஓயவில்லை சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்தல்

இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் பரவல் கணிசமாகக் குறைந்துள்ளது. நாளொன்றுக்கு 4 லட்சத்தை தாண்டி அதிர வைத்த கொரோனா, கடந்த சில வாரங்களாகப் படிப்படியாகக் குறைந்து வருகிறது. தற்போது சராசரியாக நாற்பதாயிரத்திற்கும் சற்று அதிகமாக தினசரிப் பாதிப்பு பதிவாகி வருகிறது.

தொற்றுப் பாதிப்பு குறைந்து வருவதால், ஊரடங்குக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்திய மாநில அரசுகள் தற்போது அவற்றைத் தளர்த்தியுள்ளன. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதையடுத்து, மக்கள் சுற்றுலாத் தலங்களுக்குப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். இதனால், மலை வாசஸ்தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அலைமோதும் நிலை காணப்படுகிறது.

இமாச்சலப் பிரதேசத்திலும் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இது குறித்து ஊடகங்களுக்குப் பேட்டியளித்த அந்த மாநில முதலமைச்சர் ஜெய்ராம் தாகூர், சுற்றுலாப்பயணிகளின் அதிகரித்து வரும் எண்ணிக்கை எங்களுக்குக் கவலை அளிக்கிறது. சுற்றுலாப் பயணிகளை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அவர்கள் கொரோனாத் தடுப்பு விதிகளைப் பின்பற்றவேண்டும். எங்களின் சுற்றுலாத்துறையையும் நாங்கள் பாதுகாக்க வேண்டியுள்ளது. கொரோனா இன்னும் ஓயவில்லை. எனவே, விடுதிகளும் சுற்றுலா மையங்களும் நிலையான கொரோனாத்தடுப்புவழிகாட்டிநெறிமுறைகளைக்கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வாழைச்சேனையில் கஞ்சா வியாபாரி உட்பட 5 பேர் கைது

மட்டக்களப்பு வாழைச் சேனை காவற்துறை பிரிவில் கேரளகஞ்சா, ஐஸ் போதைப் பொருள் என்பவற்றுடன் கஞ்சா வியாபாரி போதைப்பொருள் வியாபாரிகள் இருவர் உட்பட 5 பேரை நேற்று சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளமையுடன் ஒரு கிலோ 850 கிராம் கஞ்சா மற்றும் 202 கிராம் ஐஸ் போதைப் பொருள்களை மீட்டுள் ளோம் என காவற்துறையினர் தெரிவித்தனர்.



மாவட்ட காவற்துறை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று இரவு குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான காவற்துறையினர் வாழைச்சேனை செம்மண் ஓடை பகுதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் வியாபாரத்துக்காக மன்னார் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு கிலோ 850 கிராம் கேரள கஞ்சாவை மீட்டதுடன் கஞ்சா வியாபாரியை கைது செய்தனர். அதேவேளை வாழைச்சேனை பகுதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்ட காவற்துறையினர் 202 கிராம் 650 மில்லிக்கிராம், ஐஸ்போதை பொருளுடன் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் உட்பட 4 பேரை கைது செய்தனர். இதில் கைது செய்யப்பட்டவர்கள் 21 வயது தொடக்கம் 35 வயதுக்குட் பட்டவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் காவற்துறையினர் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச் சேனை காவற்துறையினர் மேற் கொண்டுவருகின்றனர்.

# மனித பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் மீட்பு

மனித பாவனைக்குதவாத காலாவதியான மற்றும் லேபல் இடப்படாத பெருமளவு உணவுப் பொருள்கள் மட்டக்களப்பு நகரில் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

இன்று காலை மட்டக்களப்பு நகரிலுள்ள மூன்று வர்த்தக நிலையங்களை முற்றுகையிட்ட சுகாதார அதிகாரிகள் சட்டவிரோதமான முறையில் அங்கு விற்பனை செய்யப்பட்டுவந்த பெருமளவிலான பொதி செய்யப்பட்ட மரமுந்திரிகை விதைகள், கோதுமை மா ,கடலை, பிஸ்கட்டுகள் மற்றும் காலாவதியான போத்தலில் அடைக்கப்பட்ட பானங்கள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் இரண்டு லட்சம் பெறுமதியான பொருள்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருள்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் கையளிக்கப்படவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.



# ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மட்டக்களப்பில் இளைஞர் தெரிவு

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் இளைஞர் தெரிவு நிகழ்வு இன்று இருதயபுரத்திலுள்ள கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுக்களின் பிரதித் தலைவருமான பா.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வின்போது மாவட்டத்தின் கல்குடா, மட்டக்களப்பு மற்றும் பட்டிருப்பு தொகுதிகளுக்கான இளைஞர் தெரிவு இடம் பெற்றது.

நிகழ்விற்கு அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் விமானசேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் இலங்கை மக்கள் இளைஞர் முன்னணியின் தலைவருமாகிய டி.வி.சானக, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஸ்ரீலங்கா பொதுஜன இளைஞர்கள் முன்னணியின் செயலாளருமான நிபுனரணவக மற்றும் கட்சியின் மட்டக்க ளப்பு மாவட்டத் தலைவரும் பின் தங்கிய கிராமிய இராஜாங்க அமைச்சருமான எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தம்பிலுவிலில் வீடு புகுந்து 8 பவுண் தங்க நகை திருட்டு

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பிலுவில் வீ.சி. வீதியில் உள்ள வீடொன்றில் 8 பவுண் தங்க நகை திருடப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்குச் சென்ற பின்னர் வீட்டிற்கு நுழைந்த திருடன் மேல்மாடியில் உள்ள அறைக்குச் சென்று அலுமாரிகளை தேடி அங்கிருந்த நகைகளை திருடிச் சென்றுள்ளான் .

வீட்டிலுள்ளவர்கள் காலையில் மேல் மாடியிலுள்ள அறைக்குச் சென்று பார்த்த போது ஜன்னல் திறந்த நிலையில் காணப்பட்டுள்ளதுடன் அறைக்குள் இருந்த பொருள்கள் கொட்டுப்பட்டுக் காணப்பட்டுள்ளன .

வீட்டின் உரிமையாளர் சம்பவம் தொடர்பில் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு திருக்கோவில் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.திலகரத்ன தலைமயிலான குற்றப்புலனாய்வு பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் விஜயராஜா குழுவினர் பொலிஸார் மோப்ப நாய் மற்றும் தடயவியல் நிபுணர்கள் சகிதம் தேடுதலில் ஈடுபட்டனர். மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இராணுவ உடையை வைத்திருந்தவர் சொறிக்கல்முனையில் கைதானார்

வீடொன்றின் காணியில் இராணுவ உடையை ஒத்த பொருள்களை பரல் ஒன்றில் மறைத்து வைத்திருந்த ஒருவரை, சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை, சவளக்கடை பொலிஸாருக்கு கிடைக் கப்பெற்ற தகவலுக்கமைய, சொறிக்கல்முனை வீரச் சோலை பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய இந்தச் சந்தேகநபர், நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து இருவேறு வகையிலான இராணுவ உடைகள் அடங்கிய பொருள்கள் உட்பட 2 தோட்டாக்களும் மேலும் சில பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பரல் மீட்கப்பட்ட பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன், சவளக்கடை பொலிஸார் சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை உள்ளூராட்சி மன்ற தலைவர்களை சந்தித்தார் பாகிஸ்தானின் உயர் தூதரக செயலாளர்

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடனான பாகிஸ்தானிய உயர் தூதரக அரசியல், கல்வி, கலாசார செயலாளர் ஆயிஷா அபூபக்கர் பஹாத்தின் சிநேகபூர்வ சந்திப்பு கிழக்கு மாகாண தகவல் தொழிநுட்ப பேரவையின் தவிசாளரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமான கலாநிதி அன்வர் முஸ்தபாவின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை காரைதீவு மற்றும் அக்கரைப்பற்றில் நடைபெற்றது.



தேசிய காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட அக்கரைப் பற்று பிரதேச சபை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட காரைதீவு பிரதேச மக்களின் குறைகள், தேவைகள், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, சமூக ஒற்றுமையின் தேவைப்பாடுகள் தொடர்பில் காரைதீவு பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் மக்கள் பிரதிநிதிகளினால் எடுத்துரைக்கப்பட் டது. இதன்போது பாகிஸ்தானில் வாழும் இந்து மக்க ளுக்கும் ஏனைய முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்குமிடையே உள்ள நட்பு, சகோதரத்துவம் தொடர்பில் விளக்கமளித்த பாகிஸ்தானிய உயர்தூதரக அரசியல், கல்வி, கலாசார செயலாளர் ஆயிஷா அபூபக்கர் பஹாத் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு தவிசாளர்கள் அடங்கிய சபையினருக்கு அழைப்பு விடுத்தார்.

நீர், மின்சாரம், கழிவறை உட்பட பொது மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யகோரிய கோரிக்கைகளை இதன்போது பாகிஸ்தானிய உயர்தூதரக அரசியல், கல்வி, கலாசார செயலாளர் ஆயிஷா அபூபக்கர் பஹாத்திடம் அக்கரைப்பற்று தவிசாளர் முன்வைத்தார்.

மேலும் இன்று ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எம். நௌஸாத்தை சிநேகபூர்வமாக சந்தித்த உயர் தூதரக செயலாளர் ஆயிஷா அபூபக்கர் சம்மாந்துறை தொடர்பிலும் முன்வைக்கப்பட்ட விடயங்களை கேட்டறிந்து கொண்டார்.





### கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடர்

# பிரேஸிலை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆர்ஜெண்டினா!

47 ஆவது கோபா அமெரிக்க கால்பந்தாட்டத் தொடரில் இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆர்ஜெண்டினாவும், பிரேஸிலும் மோதியிருந்தன.

விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதியின் 27ஆவது நிமிடத்தில், ஆர்ஜெண்டினாவின் ஏஞ்சல் டி மரியா ஒரு கோல் அடித்து முதல் பாதியில் தனது அணிக்கு 1-0 என முன்னிலை பெற்றுத்தந்தார். இரண்டாவது பாதியில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை என்பதால் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற ஆர்ஜெண்டினா அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. கோபா அமெரிக்கக் கிண்ணத்தை ஆர்ஜெண்டினா வெல்வது இது 15 ஆவது முறையாகும்.

ஆர்ஜெண்டினாவுக்கு கப்டனாக லயோனல் மெஸ்ஸி பெற்றுத்தரும் முதல் பெரிய சர்வதேசக் கிண்ணம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியின்மூலம் கோபா அமெரிக்கக் கிண்ணத்தை அதிகமுறை வென்ற அணி என்ற உருகுவேயின் சாதனையை ஆர்ஜெண்டினா சமன் செய்துள்ளது.

ஆட்டம் முழுவதும் இரு அணிகளும் பவுல்களால் நிரம்பியதாக இருந்தன. முதல் 33 நிமிடங்களிலேயே மொத்தம் 17 பவுல்கள் மத்தியஸ்தர்களால் பிடிக்கப்பட்டன. ஆட்டம் முடியும் போது மொத்தம் 41 பவுல்கள். இவற்றில் பிரேஸில் 22, ஆர்ஜெண்டினா 19 பவுல்களை விட்டிருந்தன. ஆர்ஜெண்டினாவுக்கு 5, பிரேஸிலுக்கு 4 என மொத்தமாக 9 மஞ்சள் அட்டைகள் காண்பிக்கப்பட்டிருந்தன.

2007 இல் கோபா அமெரிக்க இறுதிப் போட்டியில் ஆர்ஜெண்டினாவை பிரேஸில் 3-0 என்று வென்றிருந்தது. அதற்கு இந்தமுறை 1-0 என்று திருப்பிக் கொடுத்திருக்கிறது ஆர்ஜெண்டினா.

## யூரோ கால்பந்தாட்டத் தொடர் இறுதியாட்டம் இங்கிலாந்து - இத்தாலி அணிகள் மோதுகின்றன



16 ஆவது ஐரோப்பிய யூரோ கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 12.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

24 அணிகள் பங்கேற்ற இந்த கால்பந்தாட்டத் திருவிழாவில் லீக் மற்றும் நொக்-அவுட் சுற்று முடிவில் இத்தாலி – இங்கிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின. தோல்வியே சந்திக்காமல் இறுதிச் சுற்றை எட்டியுள்ள இவ்விரு அணிகளில் சம்பியன் கிண்ணம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதியாட்டம் லண்டன் வெம்ப்ளி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

யூரோ கால்பந்தாட்டத் தொடரில் முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு வந்துள்ள இங்கிலாந்து அணி 1966ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் எந்தப் பெரிய தொடரையும் வென்றதில்லை. நடப்புத் தொடரில் கட்டுக்கோப்புடன் ஆடிய இங்கிலாந்து, எதிரணிக்கு ஒரேயொரு கோலை மட்டுமே விட்டுக்கொடுத்துள்ளது. கப்டன் ஹரிகேன், ரஹீம் ஸ்டெர்லிங், மக்குவையர், ஜோர்டான் ஆகியோர் நம்பிக்கைத் தூண்களாக உள்ளனர். உள்நாட்டில் அறுபதாயிரம் ரசிகர்களுக்கு முன்னிலையில் களம் இறங்குவதால் கூடுதல் உத்வேகத்துடன் இங்கிலாந்து விளையாடும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தத் தொடரில் இதுவரை 4 கோல்கள் அடித்துள்ள இங்கிலாந்து கப்டன் ஹரிகேன் இன்றைய ஆட்டத்தில் மேலும் 2 கோல்களை அடித்தால் அதிக கோல்கள் அடித்தவர்களுக்கான பட்டியலில் 5 கோல்கள் அடித்திருக்கும் கிறிஸ்டியானோ ரொனால்டோவை முந்திக் கொண்டு தங்கக் காலணியை வெல்ல முடியும். ஒரு கோல் அடித்து, 2 கோல்களுக்கு உதவிகரமாக இருந்தாலும் அவருக்கு அந்த விருது கிடைக்கும். நான்கு முறை உலகச் சம்பியனான இத்தாலி அணி இதற்கு முன்பு 1968இல் ஒரேயொரு முறை யூரோக் கிண்ணத்தை வென்றுள்ளது. களத்தில் அதிரடியான தாக்குதல் பாணியை கையாளுவதில் கில்லாடியான இத்தாலி அணி இந்தத் தொடரில் மட்டும் 12 கோல்களை அடித்திருக்கிறது. இறுதியாக விளையாடிய 33 சர்வதேசப் போட்டிகளில் அந்த அணி தோற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கப்டன் ஜியோர் ஜியோ செலினி, பெடரிகோ சிஸா, இம்மொபைல், லோரென்சோ இன்சினே, லியோனர்டோ போனுக்சி, கோல் காப்பாளர் டோனருமா உள்ளிட்டோர் சிறப்பான நிலையில் உள்ளனர்.

இரு அணிகளும் தனித்திறமை வாய்ந்தவை என்பதால் களத்தில் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது என்பதில் சந்தேகமில்லை. நெருக்கடியைத் திறம்படச் சமாளிப்பதைப் பொறுத்து அணிகளுக்கான வெற்றி வாய்ப்பு அமையும் என்பதே விளையாட்டு ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

இங்கிலாந்து கப்டன் ஹரிகேன் கூறுகையில், 'கிண்ணத்தை வெல்ல இரு அணிகளுக்கும் சரிசம வாய்ப்பு இருப்பதாகவே கருதுகிறேன். வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் பெரிய போட்டிகளை வென்றதில் எங்களைவிட இத்தாலியின் கையே ஓங்கியுள்ளது. ஆனால், இப்போது எங்கள் அணியில் உள்ள பெரும்பாலான வீரர்களுக்கு கழக அளவில் பெரிய போட்டிகளிலும் இறுதிப்போட்டிகளிலும் விளையாடிய அனுபவம் இருக்கிறது. வெற்றியை வசப்படுத்தக் களத்தில் என்ன செய்யவேண்டும் என்பது தெரியும். கிண்ணத்தை எங்களால் வெல்ல முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். அதே சமயம் இது மிகவும் கடினமான ஆட்டமாக இருக்கப்போகிறது என்பதையும் அறிவோம். அவர்களிடம் சிறந்த வீரர்கள் உள்ளனர்' என்று தெரிவித்திருக்கிறார்.

இவ்விரு அணிகளும் இதுவரை 27 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளன. இதில் 11 இல் இத்தாலியும், 8 இல் இங்கிலாந்தும் வெற்றிகண்டுள்ளன. 8 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்துள்ளன.





## பாகிஸ்தானுடனான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து வெற்றி; தொடரையும் கைப்பற்றியது

லண்டனில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 52 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. மழை காரணமாக அணிக்கு தலா 47 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45.2 ஓவர்களில் 247 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பிலிப் சால்ட் 60 ஓட்டங்களும், வின்ஸ் 56 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் சார்பில் ஹசன் அலி 5 விக்கெட்டுக்களையும், ஹரிஸ் ரவுப் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். அடுத்ததாக களமிறங்கி விளையாடிய பாகிஸ்தான் அணி 41 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. அந்த அணியின் சார்பில் சவுட்கீல் 56, ஹசன் அலி 31 ஓட்டங்களை எடுத்தனர்.

இங்கிலாந்து அணியின் கிரெகொரி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி ஒரு போட்டி மீதமுள்ள நிலையிலேயே தொடரையும் 2 - 0 என்று கைப்பற்றியிருக்கிறது.

## விம்பிள்டன் ஆடவர் இறுதிப்போட்டியில் ஜோகோவிச்- பெரெட்டினி மோதல்



இன்று நடைபெறவுள்ள விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆடவர் இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் ஜோகோவிச், இத்தாலி வீரர் பெரெட்டினியை எதிர்கொள்கிறார்.

அரையிறுதி ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் கனடாவைச் சேர்ந்த போவலோவை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ஜோகோவிச் 7-6, 7-5, 7-5 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று விம்பிள்டன் டென்னிஸின் இறுதிப் போட்டிக்கு ஏழாவது முறையாகத் தகுதி பெற்றார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் இத்தாலியைச் சேர்ந்த பெரெட்டினி 6-3, 6-0, 6-7, 6-4 என்ற செட் கணக்கில் போலந்தின் ஹர்காசை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். விம்பிள்டன் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த முதல் இத்தாலி வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

## கொரோனா சட்ட விதிகளைக் கடைப்பிடிக்காமை;

# வவுனியா நவீன சந்தை வர்த்தக நிலையங்களுக்கு 2 நாள் கால அவகாசம் மீறினால் சட்ட நடவடிக்கை

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தியாகலிங்கம் எச்சரிக்கை

வவுனியா, ஜூலை 11

வவுனியா நவீன சந்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு சுகாதார நடைமுறைகளை சீராக்குவதற்கு இரு நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதுடன், மீறினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதில் கடமையாற்றுவோர் பி.சி.ஆர். மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கட்டடத் தொகுதியில் சுகாதார நடைமுறைகள் சிலவற்றை சீராகப் பேணுவதில் இடையூறுகள் காணப்படுகின்றன. இங்கு பல நபர்கள் முகக்கவசத்தை சீரான முறையில் அணிவதில்லை. இப்பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு 5 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு அங்கு பணியாற்றுவோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வர்த்தக நிலையங்கள் முன்பாக மற்றும் நடைபாதைகளில் பொருள்கள் உள்ளமையால் தொற்று நீக்கும் செயற்பாட்டை மேற்கொள்வதற்குரிய வசதிகள் இல்லை என்பதுடன் 2 நாள்கள் கால அவகாசம் வழங்குகின்றோம். இருநாள்களுக்குள் வர்த்தக நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவுள்ள பகுதி என்பன தொற்று நீக்கும் செயற்பாட்டை முன்னெடுத்தல் கட்டாயமாகும்.

வர்த்தக நிலையத்துக்கு முன்பாகப் பொருள்களை வைப்பதற்கு ஓர் அடி மாத்திரமே நகரசபை கட்டளை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக சுகாதாரப் பிரிவினரின் வேண்டுகோளுக்கிணங்க 11/2 அடி வரை பொருள்களை வைப்பதற்கு நகரசபையினரால் தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களுடனான ஒரு மீற்றர் இடைவெளி பேணுதல் அவசியமாகும். இவற்றை சீராக நடைமுறைப்படுத்தாத இடத்து ஒற்றை எண் அடிப்படையில் வர்த்தக நிலையங்களை திறப்பதற்கும் (50 வீதமான வர்த்தக நிலையங்கள் ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில்) நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சுகாதார நடைமுறைகளை மீறி செயற்படும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளவும் தயராகவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (100)







## 4 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு சீரற்ற காலநிலையால் மின்சாரம் அவுட்

*கொழும்பு, ஜூலை 11*

*நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சுமார் 4 லட்சத்து 75 ஆயிரம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இதுவரை மின் துண்டிப்பு தொடர்பாக 12 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனவும் நிலைமையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*காலி, மாத்தறை, கிரிபத்கொடை, கண்டி, பெரதெனிய, குளியாப்பிட்டி, குருநாகல், களனி, ரத்மலானை, சிலாபம் ஆகிய இடங்களில் இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டுள்ளது.*

*இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை மற்றும் காற்று காரணமாக அனர்த்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.*

*மரங்கள் வீழ்வு, மண்மேடு சரிவு போன்ற காரணங்களால் சில பாதைகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதோடு, வீடுகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.*

## யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஐ றோட் திட்டத்தின்கீழ் பல வீதிகள் புனரமைப்பு

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஐ றோட் திட்டத்தின் கீழ் பல வீதிகள் புனரமைப்பு செய்யப்படுகின்ற நிலையில் அவற்றில் ஒரு சில வீதிகளில் குறிப்பாக பிறவுண் வீதி மற்றும் ரக்கா வீதி போன்றவற்றின் புனரமைப்பு தொடர்பாக அப்பகுதி மக்கள் மற்றும் சில பத்திரிகைகள் அந்த வீதிகளில் அமைக்கப்படுகின்ற வெள்ள வடிகால், வீதியின் அகலம் போன்ற சில குறைபாடுகளை சுட்டிக் காட்டியிருந்தன.

இந்த நிலையில் மேற்படி வீதிகளுக்கு மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் வீதிப் புனரமைப்பில் தொடர்புடைய அனைத்து திணைக்கள அதிகாரிகளுடன் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மேற்கூறிய குறைபாடுகளை சுட்டிக் காட்டிய மாநகர முதல்வர் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து வீதி புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்துமாறு பணித்தார். அத்துடன் பிறவுண் வீதி பல மாதகாலமாகப் புனரமைப்பு வேலைகள் தொடர்கின்ற நிலையில் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எனவே இந்த வீதி வேலைகளை வேகப்படுத்தி காப்பெற்றை விரைவாக இடுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

மாநகர முதல்வர் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து மிக விரைவாகக் வீதிகளின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதாக வீதி ஒப்பந்தகார மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உறுதியளித்தனர்.

மாநகர முதல்வருடனான இந்தக் கள விஜயத்தின் போது மாநகர பொறியியலாளர், ஐ றோட் திட்ட அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தில் 5 ஆயிரத்து 957 ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உள்ளிட்ட பாடசாலை உத்தியோகத்தர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 14 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 10 ஆயிரத்து 354 ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை உத்தியோகத்தர்கள் உள்ளனர் என விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களில் 5 ஆயிரத்து 957 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

இது மொத்த உத்தியோகத்தர்களில் 57.53 சதவீதம் என அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2021இல் வெளியிடப்பெற்றது.